9th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கிராம உத்தியோகஸ்தர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா, இல்லையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. அதற்கும் இந்த நிர்வாகச் சீரமைப்புக்கும் சம்பந்தம் இல்லை. இதன் மூலம் யாரும் வேலை இழக்க நேரிடாது. அரசாங்க விதிகளின் கீழ் தாற்காலிக வேலைக்கு அதிகாரிகள் தாற்காலிகமாகச் சிலரை நியமித்துக்கொள்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக வைத்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்ல முடியாது. எப்போது தாற்காலிகமாக சில ஆட்கள் தேவைப்படுகிறதோ, அப்போது தாற்காலிகமாக நியமித்துக் கொள்கிறார்கள்.

***300 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க இலாகாக்களில் சிக்கன நடவடிக்கை எடுத்ததின் பலனாக வேலை இழக்கும் சிப்பந்திகளுக்கு மாற்று உத்தியோகங்கள் அளிப்பதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்து உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ)—(இ) 1—10—1965 தேதியன்று அல்லது அதற்குப்பிறகு நியமிக்கப்பட்ட உபரிப்பணியாளர்கள் மட்டுமே ஆட்குறைப்புத் திட்டத்தின்படி வேலையிழப்பர். இவர்களும், சிவில் சப்ளைத்துறை, வேளாண்மைத்துறை போன்ற பல்வேறு துறைகளில் அனுமதிக்கப்பட்டுவருகிற புதிய பதவிகளில் நாளடைவில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கத் தனி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய அளவில் ஆட்குறைப்புத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

UNSTARRED QUESTIONS.

Wild Birds and Animals Protection Act.

1. *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

The forests, tanks, water sources and other sites in the State declared to be areas, wherein shooting of birds or wild animals are prohibited under Wild Birds and Animals Protection Act.

A.—The particulars are appended.

விவரங்கள் பின் இணைப்பில் [a] கொடுக்கப்பட்டுள்ளன.

Procurement and distribution of foodgrains.

2. *Q.*—Sri S. J. RAMASWAMY: Will the Hon. the Minister for Food be pleased to state:—

(*a*) the number of wholesale and retail licences granted for the procurement and distribution of foodgrains in the State so far, district-wise;

(*b*) the number of defaulters among them;

---

[a] Printed as Appendix VIII on pages 995–998.